# CULTURAL HERITAGE OF TAMIL NADU

**UNIT-II**

Medieval Period: Madurai Sultanate - Vijiyanagar Period - Education, Art and Architecture.

# மதுரை சுல்தானியர்கள்

மதுரை சுல்தானகம் அல்லது மாபார் சுல்தானகம், பதினான்காம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு செயல்பட்ட ஒரு சிற்றரசாகும். பாண்டிய பேரரசு வீழ்ச்சியடைந்தபின் நடைபெற்ற இஸ்லாமிய படையெடுப்புகளால் தோன்றிய இந்த சுல்தானகம், பின்னர் விஜயநகரப் பேரரசின் படையெடுப்புகளால் அழிக்கப்பட்டது. இதுவே தமிழகத்தில் தொடர்ச்சியாக ஆட்சி புரிந்த ஒரே இஸ்லாமிய அரசு.

**பின்புலம்**

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் (1268 – 1308) மரணத்திற்கு பிறகு, அவரது மகன்கள் சுந்தர பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் இடையே உள்நாட்டுப் போர் மூண்டது. இஸ்லாமிய வரலாற்றாளர்கள் அப்துல்லா வசா்ப், அமீர் குஸ்ரோ ஆகியோரின் குறிப்புகள், வீரபாண்டியன் அந்தப் போரில் டெல்லி சுல்தானகத்தின் படைத் தலைவர் மாலிக் க்பூரின் துணையை நாடினார் என்று கூறுகின்றன. இதனால் க்பூரின் படைகள் கி. பி. 1310-11ல் மதுரையைக் கைப்பற்றி சூறையாடின. இதன் பின்னால், பாண்டிய உள்நாட்டுப் போர் தொடர்ந்து நடை பெற்றது. மேலும் இருமுறை டெல்லி சுல்தானகப் படைகள் குஸ்ராவ் கான் தலைமையிலும் (1318), உலூக் கானின் (1323) தலைமையிலும் மதுரையை சூறையாடின. உலூக்கான் மதுரையை டெல்லி சுல்தானகத்துடன் இணைத்து விட்டார். பாண்டிய நாடு, மாபார் என்ற பெயருடன் டெல்லி சுல்தானகத்தின் ஐந்து தென்னிந்திய பிரதேசங்களுள் (மாபார், தேவகிரி, டிலிங்க், கம்பிலி, துவாரசமுத்திரம்) ஒன்றாகியது.

1325-ம் ஆண்டு உலூக் கான் முகமது பின் துக்ளக் என்ற பெயருடன் டெல்லி சுல்தானாக முடி சூடினார். பாரசீகம் மற்றும் கொரோசான் (தற்கால ஆ்ப்கானிஸ்தான்) நாடுகளின் மீது அவரது படையெடுப்பு முயற்சிகள் அவரது கருவூலத்தைக் காலி செய்தன. இதனால் அவரது

படையினருக்கு ஊதியம் சரிவர வழங்க இயலவில்லை. அவரது பேரரசின் எல்லையோரப் பிரதேசங்கள் பிரிந்து செல்ல ஆரம்பித்தன. முதலில் வங்காளம் போர்க்கொடி தூக்கியது. பின்னர் மாபார் ஆளுனர் ஜலாலுதீன் ஆசன் கான் மதுரையை சுதந்திர நாடாக அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியான 1335 ஆம் ஆண்டே மதுரை சுல்தானகம் தோன்றிய ஆண்டாகக் கருதப்படுகிறது, சுல்தானகம் வெளியிட்ட நாணயங்களும் இவ்வாண்டே தொடங்குகின்றன. ஆனால் பாரசீக வரலாற்றாளர் ஃபிரிஷ்தா 1340 ஆம் ஆண்டு மாபார் பிரிந்து போனதாக குறிப்பிட்டுள்ளார்.

**சுல்தான்கள்**

ஜலாலுதீன் ஆசன் கான், மதுரையின் முதல் சுல்தான் ஆவார். இவரது மகன் இப்ராஹீம் டெல்லி சுல்தான் முகமது பின் துக்ளக்கிடம் பணியாற்றினார். மாபார் பிரிந்து சென்ற செய்தியை கேட்டவுடன் ஆத்திரம் அடைந்த துக்ளக் இப்ரஹீமை கொலை செய்தார். பெரும் படையுடன் மாபாரை மீண்டும் கைப்பற்ற தெற்கு நோக்கி கிளம்பினார். ஆனால் வழியில் உடல் நலக்குறைவினால் படையெடுப்பை கைவிட நேர்ந்தது. ஜலாலுதீனின் ஆட்சிக்கு வந்த ஆபத்து நீங்கியது. ஜலாலுதீனின் மகளை மொரோக்கோ நாட்டின் வரலாற்றாளர் இப்னு பதூதா மணந்திருந்தார். 1340 ஆம் ஆண்டு ஜலாலுதீன் அவருடை பிரபு (சிற்றரசர்) ஒருவரால் கொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின் சுல்தானாகிய அலாவுதீன் உதாஜி, குதுப்துதீன் ஃபிரோஸ் ஆகியோரும் முடிசூடிய குறுகிய காலத்தில் கொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கு பின்னர் மதுரை சுல்தானகம் கியாத்துதீன் முகமது தம்கானியின் ஆட்சியின் கீழ் வந்தது. இபுன் பத்தூதா கியாத்துதீனின் ஆட்சி காலத்தில் மதுரைக்கு வந்தார். அவரது குறிப்புகள் கியாத்துதீன் ஆட்சி ஒரு கொடுங்கோலனின் ஆட்சி என்று வர்ணிக்கின்றன. கியாத்துதீன், போசள மன்னர் மூன்றாம் வீர வல்லாளன் மோதினார். முதலில் தோல்வி அடைந்தாலும் பின்னர் கண்ணனூர் கொப்பம் கோட்டையின் முற்றுகையின் (1343) போது வல்லாளரை சிறைபிடித்தார். வல்லாளரைக் கொன்று, வைக்கோல் அடைக்கப்பட்ட அவரது உடலை மதுரை கோட்டை சுவர்களில் காட்சிக்கு வைத்தார். 1344 ஆம் ஆண்டு வீரிய மருந்து ஒவ்வாமை காரணமாக, கியாத்துதீன் மரணமடைந்தார்.

கியாத்துதீன் மரணத்திற்கு பிறகு மதுரை சுல்தானகம் வலுவிழந்தது. விஜயநகரப் பேரரசின் படைகள் இளவரசர் குமார கம்பண்ண உடையாரின் தலைமையில் தெற்கு நோக்கி படையெடுக்கத் தொடங்கின. கம்பண்ணரின் மனைவி கங்கதேவி எழுதிய மதுரா விஜயம் என்ற நூலில் இப்படையெடுப்பு விவரிக்கப்பட்டுள்ளது. 1344-1371 காலகட்டத்தில் நசுரீதின் தம்கானி, ஷம்சுதீன் ஆதில் ஷா, ஃபக்ரூதின் முபாரக் ஷா, அலாவுதீன்

சிகந்தர் ஷா ஆகியோர் மதுரையின் சுல்தான்களாக இருந்தனர். விஜய நகர் படைகள் சம்புவரையர்களை வென்று, ஸ்ரீரங்கத்தை கைப்பற்றி மதுரையை நோக்கி முன்னேறின. சுல்தான்களுடனான இறுதி யுத்தத்தில், கம்பண்ணர், சிக்கந்தர் ஷாவுடன் தனியே போரிட்டு சுல்தான் தலையை வெட்டி சாய்த்ததாக மதுரா விஜயம் கூறுகிறது. சிக்கந்தர் மற்றும் ஃபக்ருதீனின் சமாதிகள் மதுரை நகரில் உள்ள கோரிப்பாளையம் தர்காவில் உள்ளன. திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்காவும் சிக்கந்தர் ஷாவின் நினைவாக எழுந்ததாக நம்பப்படுகிறது.

| **சுல்தான்** | **ஆட்சி காலம்** |
|---|---|
| ஜலாலுதீன் ஆசன் கான் | கி.பி 1335–1339 |
| அலாவுதீன் உதாஜி | கி.பி. 1339 |
| குதுப்துதீன் ஃபிரோஸ் | கி.பி. 1339–1340 |
| கியாத்துதீன் முகமது தம்கானி | கி.பி. 1340–1344 |
| நசுரீதின் தம்கானி | கி.பி. 1344–1356 |
| ஷம்சுதீன் ஆதில் ஷா | கி.பி. 1356–1358 |
| ஃபக்ரூதின் முபாரக் ஷா | கி.பி. 1358–1368 |
| அலாவுதீன் சிகந்தர் ஷா | கி.பி. 1368–1378 |

## ஆட்சி குறிப்புகள்

மதுரை சுல்தானகத்தைப் பற்றி அறிய இரு சமகாலத்திய சான்றுகளை வரலாற்று ஆசிரியர்கள் பயன்படுத்துகிறார்கள். இபுனு பதூதாவின் குறிப்புகளும், கங்கதேவியின் மதுரா விஜயம் இரண்டுமே, மதுரை சுல்தான்களை கொடுங்கோலர்களாகவும், இந்து குடிமக்களை கொடுமை படுத்தியவர்களாகவும் சித்தரிக்கின்றன. கியாத்துதீன் இந்துகளுக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டு மனம் வருந்திய பதூதா, “இக்கொடுமைகளின் காரணமாகவே இறைவன், கியாத்துதீனின் மரணத்தை துரிதப்படுத்தினார்” என்று குறிப்பிடுகிறார். மதுரா விஜயம் “குளிக்கும் பெண்களின் மார்பில் பூசிய சந்தனம் கலந்து வெளிர் நிறமாக ஓடிய தாமிரபரணி, சுல்தான்களின் ஆட்சியில் பலியிடப்பட்ட பசுக்களின் ரத்தம் கலந்து சிவந்து ஓடியது” எனக் குறிப்பிட்டுகிறது. கிபி 1378ல் விஜயநகரப் பேரரசர் முதலாவது புக்கா ராயனின் மகன் இளவரசர் குமார கம்பணன், மதுரை சுல்தான்களை வென்றார். பின்னர் மதுரையில் மதுரை நாயக்கர்கள் ஆட்சி நிறுவப்பட்டது.

## அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கம்

**கலை, கட்டிடக்கலை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம்**

முஸ்லீம்கள் ஆட்சிக் காலத்தில் கலை, கட்டிடக்கலையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் காணப்பட்ட மலாமியக் கலை இந்துக்கலையைப் போன்று கவர்ச்சியும், அழகும், விமையும், தூய்மையும் உடையதாக விளங்கின. இந்து ஆலயங்களில் சாணப்பட்டது போன்று இல்லாமல் இஸ்லாமிய ஆலயங்களில் விளைவுகள் அதிகமாகக் காணப்பட்டது. இந்தப் புதியக் கட்டிடக் சால சரசானிக் கட்டிடக்கலை என்று அழைக்கப்பட்டது.

இந்த புதிய சரசானிக் கட்டிடக் கலையில் பாரம்பரிய அம்சங்களான கைவேலைப்பாடுகள் அழகான வடிவமைப்புகள் பொன்றவை காணப்பட்டன. இந்தப் புதிய கட்டிடக் கலையைப் பின்பற்றி பல நினைவுச் சின்னங்களும், வீடுகள், தெருக்கள் மற்றும் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இந்த சரசானிக் கலையின் அடிப்படையில் அணிகலன்களும் செய்யப்பட்டன. இவ்வாறு இந்துக் கலையும் இஸ்லாமியக் கலையும் இணைந்து அதன் அடிப்படையில் இந்து, முஸ்லீம் ஆலயங்கள் எழுப்பப்பட்டன.

**மொழி வளர்ச்சி**

இஸ்லாமியர்கள் மொழி வளர்ச்சிக்கு ஆதரவளித்தனர். இக்காலத்தில் இந்து, இஸ்லாமிய, பிராந்திய மொழி இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக இந்து முஸ்லீம் தொடர்பின் சபரணமாக புதிய மொழியாகிய உருது தோன்றியது. மிகக் குறுகிய 4.பாலத்தில் இந்த உருது மொழி வளர்ச்சியடைந்தது. இம்மொழியில் பல இலக்கியங்கள் தோன்றின. மேலும் இதே காலத்தில் பாரசீக மொழியிலும் பல வரலாறுகளும், சுயசரிதைகளும், கடிதங்களும் எழுதப்பட்டன. மேலும் இஸ்லாமியர்களின் வருகையால் காகிதத்தைப் பயன்படுத்துதல், காகிதங்களில் படங்களைப் பதித்தல் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.

**கல்வி வளர்ச்சி**

முஸ்லீம் ஆட்சியாளர்கள் கற்றறிந்த அறிஞர்களை ஆதரித்தனர். கல்வி கற்றவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டார்கள். முஸ்லீம் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கல்வி நிறுவனங்களும் நூல் நிலையங்களும் நிறுவப்பட்டன. கவிஞர்களும், எழுத்தாளர்களும், தத்துவஞானிகளும் முஸ்லீம் ஆட்சியாளர்களின் அவையை அலங்கரித்தனர். அக்காலத்தில் அச்சகங்கள் காணப்படாததால்

கையால் எழுதுவதற்கு தனி நபர்கள் நியமிக்கப் பட்டனர். கல்விக் கூடங்களில் சமயக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மாணவர்களுக்கு அரபி மொழி கட்டாயமாகப் போதிக்கப்பட்டது.

### தமிழ் முஸ்லீம் சமுதாயத்தின் தோற்றம்

தமிழ் சமுதாயத்தினர் ஆரம்பத்தில் முஸ்லீம்களை எதிரிகளாகவே கருதினர். ஆனால் நாளடைவில் தங்கள் பகைமையை மறந்தனர். இதனால் இவ்விரு கலாச்சாரங்களும் இணைந்தன. இதன் விளைவாகத் தமிழ் முஸ்லீம் சமுதாயம் உருவானது.

### முஸ்லீம் அரசர்களின் ஆடம்பரம்

தமிழகத்தை ஆண்டு வந்த அரசர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்ட முஸ்லீம் சுல்தான்களும் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டனர். தங்கள் அரசவையை மிக ஆடம்பரமாக நடத்தினர்.

### கலாச்சார இணைப்பு

இந்து முஸ்லீம் இணைப்பு ஏற்பட்டதன் விளைவாக இந்துக்கள் முஸ்லீம்களின் ஆடை அணியும் முறை மற்றும் சில சமுதாய சடங்குகளைப் பின்பற்றினர். அதேபோல முஸ்லீம்களும் இந்து முறையிலான பல பண்புகளை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தினர். முக்கியமாக இந்துக்களைப் போன்று திருவிழாக்களை ஆடம்பரமாக நடத்த முற்பட்டனர். முஸ்லீம்களின் வருகையால் தமிழகச் சமுதாயத் தூய்மை சீர்கேடடைந்தது. இந்துப் பெண்களை வலுக்கட்டாயமாக முஸ்லீம்கள் திருமணம் செய்தனர். இதனால் இந்துக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இந்து சமயமும் இதனால் பாதிக்கப்பட்டது. முஸ்லீம்களின் ஆட்சிக்கு முன்பாக தமிழகத்தில் சாதிக் கொடுமை வேரூன்றி காணப்பட்டது. பிராமணர்கள் ஆதிக்கம் உச்ச கட்டத்தில் இருந்தது. அவர்கள் பிற சாதியினரை மிகவும் இழிவாகக் கருதினர். ஆனால் முஸ்லீம்களின் வருகைக்குப் சாதிக் கொடுமை தணிந்தது.

### இஸ்லாமிய மதத்தின் வளர்ச்சி

முஸ்லீம்கள் தங்கள் சமயத்தை தமிழகத்தில் பரப்ப மிகவும் ஆர்வம் கொண்டு செயல்பட்டனர். இந்துக்களை வலுக்கட்டாயமாக தங்கள் மதத்தில் இணைத்தனர். பல இஸ்லாமிய மசூதிகள் இறக்கப்பட்டன. இதனால் இந்து மதம் நலிவடைந்தது. எனவே இந்து மதத்தைப் பாதுகாக்கப் பக்தி நெறி போன்ற பல இயக்கங்கள் - ஆரம்பிக்கப்பட்டன.

### தமிழர்களின் வெளி உலகத் தொடர்பு

முஸ்லீம்களின் வருகையால் தமிழ் நாட்டில் நிலவி வந்த பல பாரம்பரியத் தடைகள் விலக்கப்பட்டன. இதன் விளைவாக இதுவரை தமிழ் நாட்டினுள்ளே ஒதுங்கி வாழ்ந்து வந்த தமிழர்கள் வெளி உலகுடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர். இதனால் தமிழர்களின் வெளிஉலகத் தொடர்பு அதிகரித்தது.

### இந்துக்கள் மீது கொடுமைகள் அதிகரிப்பு

முஸ்லீம்கள் இந்து சமுதாயத்தில் பல கட்டுப்பாடுகளை விதித்தனர். முஸ்லீம் பெண்கள் அணிவது போன்ற பர்தா முறையை இந்துப் பெண்களும் பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். இந்து ஆலயங்கள் அடிக்கடி சூறையாடப்பட்டன. இந்துக்களின் சமய உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்து தெய்வங்கள் நிந்திக்கப்பட்டன. இந்துக்கள் பலர் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டனர். இதனால் இந்து சமுதாயம் நலிவடைந்தது.

### இந்துக்களின் வரிப்பளு

முஸ்லீம்களின் ஆட்சியில் இந்துக்கள் மீது அதிகமான வரி போடப்பட்டது. புதிய வரிகளாகிய ஜிசியா, வருமான வரி, வீட்டு வரி, சுங்க வரி போன்றவை விதிக்கப்பட்டன. நிலவரி கடுமையாக வசூலிக்கப் பட்டது. வரிவசூல் செய்யும் இந்து அதிகாரிகளுக்குக்கூட சலுகைகள் காட்டப்படவில்லை. விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. இவ்வாறு முஸ்லீம் ஆட்சியின் விளைவாக தமிழகச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இந்துக் கலாச்சாரம் அதன் சிறப்புத் தன்மையை இழக்க ஆரம்பித்தது. சமுதாய நிலையிலும், அரசியலிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. எனவே தான் இந்துக்களைப் பாதுகாக்க கி.பி.1336-ல் இந்து அரசாகிய விஜய நகர அரசு தோன்றியது. அதன்பின் முஸ்லீம் ஆதிக்கம் சிறிதாகக் குறைந்து பின்னர் முற்றிலும் மறைந்தது.

# விஜயநகரப் பேரரசு

விஜயநகரப் பேரரசு (1336 - 1646), தென் இந்தியாவின் தற்கால கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கேரளாவின் பெரும்பாலான பகுதிகளைக் கொண்ட ஒரு பேரரசு ஆகும். தென்னிந்தியாவில் தில்லி சுல்தான்களின் ஆட்சி விரிவாக்கத்தை தடுக்கவே வித்யாரண்யர் வழிகாட்டுதலின் படி, விஜயநகரப் பேரரசு 1336 ஆம் ஆண்டில் முதலாம் ஹரிஹரர் மற்றும் முதலாம் புக்கராயர் ஆகியோரால் நிறுவப்பட்டது. இப்பேரரசின் புகழ் பெற்றவர் கிருஷ்ணதேவராயர் ஆவார். இதன் தலைநகரமான விஜயநகரத்தின் பெயரினால் இப்பேரரசின் பெயர் உருவானது. இந்நகரின் அழிபாடுகள் இன்றைய இந்திய மாநிலமான கர்நாடகத்தில் உள்ள ஹம்பியைச் சுற்றிலும் காணப்படுகின்றன. உலகப் பாரம்பரியக் களங்களில் ஒன்றாக ஹம்பி விளங்குகிறது.

மத்தியகால ஐரோப்பியப் பயணிகளான டொமிங்கோ பயஸ் (Domingo Paes), பெர்னாவோ நுனிஸ் (Fernao Nuniz), நிக்கோலோ டா கொன்ட்டி (Niccolò Da Conti) ஆகியோரது ஆக்கங்களிலிருந்தும், உள்ளூர் இலக்கிய மூலங்களில் இருந்தும் இதன் வரலாறு பற்றிய பல முக்கிய தகவல்கள் கிடைக்கின்றன. இப்பகுதியில் நடத்தப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் விஜயநகரப் பேரரசின் வலு மற்றும் வளம் குறித்த பல தகவல்களைத் தருகின்றன.

இப் பேரரசு தொடர்பான நினைவுச் சின்னங்கள் பல தென்னிந்தியா முழுவதும் பரவலாக உள்ளன. இவற்றுள் ஹம்பியில் உள்ளவை பெரிதும் புகழ் பெற்றவை. விஜயநகரக் கட்டிடக்கலைப் பாணி தென்னிந்தியக் கட்டிடக்கலையின் இன்றியமையாத ஒரு பகுதியாகும். பல பல நம்பிக்கைகள் மற்றும் நாட்டார் மரபுகளின் தொடர்புகள், இந்துக் கோயில் கட்டுமானங்களில் புதுமைகளைப் புகுத்தியது. இது முதலில் தக்காணத்திலும் பின்னர் திராவிடக் கட்டிடக்கலையிலும் ஏற்பட்டது. சமயச் சார்பற்ற கட்டிடங்களில் வட தக்காணத்துச் சுல்தானகக் கட்டிடக்கலையின் தாக்கங்கள் காணப்படுகின்றன.

இப்பேரரசு காலத்தில் தென்னிந்தியாவில் கலை, கன்னடம் மற்றும் தெலுங்கு மொழி இலக்கியம், இந்துக் கோயில் கட்டிடக் கலை, இந்து சமயம், நீர் பாசன முறை, தொழில், வணிகம் சிறப்பு விளங்கியது. இப் பேரரசு 1646 வரையில் நீடித்ததாயினும், 1565 ஆம் ஆண்டில் தக்காணத்துச் சுல்தான்களால் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர் இப் பேரரசு பெரிதும் வலுவிழந்து போனது.

ஆட்சி நிர்வாகம்

பேரரசருக்கு ஆட்சியில் ஆலோசனைகள் வழங்க காரிய கர்த்தா அல்லது இராயசம் எனப்படும் பிரதம அமைச்சர் தலைமையிலான அமைச்சரவை இருந்தது. அரச அரண்மனைக்கு அருகில் அரசு ஆவணங்கள் அரச முத்திரையுடன் பராமரிக்கும் செயலகம் செயல்பட்டது. அரண்மனை நிர்வாகத்தை மேற்கொள்ள 72 துறைகள் இருந்தன.

விருபட்சர் கோயிலில் கிருஷ்ணதேவராயரின் கன்னட மொழி கல்வெட்டில், தனது மணிமகுடம் சூட்டும் நிகழ்வு மற்றும் மகாமண்டபம் கட்டியது குறித்தது, கிபி 1509 பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலம் பல நாடுகளாகவும், நாடுகள் பல ஸ்தலங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஸ்தலம் என்பது பல கிராமங்களைக் கொண்டிருந்த பிரிவாகும். இந்நிர்வாக அலகுகளை பரம்பரையாக ஆண்டதுடன், பேரரசிற்கு ஆண்டு தோறும் திறை செலுத்தினர். மண்டலத்தின் ஆளுநர் மண்டலேஸ்வரர் அல்லது நாயக் என்று அழைக்கப்பட்டார். விஜய நகர ஆட்சியாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆட்சியில் முழு அதிகாரங்களை வழங்கியிருந்தனர்.

நிலவரி தவிர, திறைகள், பரிசுகள் ஆகியவற்றை சிற்றரசர்களும் படைத்தவைர்களும் அவ்வப்போது பேரரசுக்கு அனுப்பி வந்தனர். துறைமுகங்களில் வசூலிக்கப்பட்ட சுங்கம் பல்வேறு தொழிலாளர்கள் மீதான வரிகள் ஆகியவையும் அரசாங்கத்தின் வருவாயாக இருந்தன. விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது. அரசரின் தனிப்பட்ட செலவுகள், அவர் அளிக்கும் கொடைகள், படைத்துறைக்கான செலவுகள் போன்றவை அரசின் முக்கிய செலவினங்களாகும். நீதித்துறையைப் பொறுத்தவரை உடல் உறுப்புகளை சிதைத்தல், யானைக்காலால் இடறுதல் போன்ற கொடுமையான தண்டனைகள் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்டன. கோயில் சொத்துக்களைக் கொள்ளையடிப்போருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

விஜய நகர ராணுவம் திறமையான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தது. குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, யானைப்படை என நான்கு முக்கிய பிரிவுகளை அது கொண்டிருந்தது. அரபு நாடுகளின் வணிககளிடமிருந்து உயர்ரக குதிரைகள் இராணுவத்திற்காக வாங்கப்பட்டன. இராணுவத்தின் உயர் அதிகாரிகள் நாயக் அல்லது பாளையக்காரர் என்று அழைக்கபட்டனர். அவர்கள் ஆற்றும் பணிக்கு ஈடாக நிலங்கள் வழங்கப்பட்டன. இந்நிலங்கள் அமரம் என்று அழைக்கப்பட்டது. படை வீர்களுக்கு ஊதியம் பொதுவாக பணமாகவே வழங்கப்பட்டது

மதுரை பிரதேசமும், கேளடி பிரதேசமும் பேரரசின் படைத்தலைவர்களால் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது. 1.1 மில்லியன் பேரரசின் படைகளில் இசுலாமிய வீரகளும் சேர்க்கப்பட்டனர். கிருஷ்ணதேவராயரின் தனிப்படையில் மட்டும் ஒரு இலட்சம் காலாட்படையினரும், 20,000 குதிரைப்படைவீரர்களும், 900 யானைப்படையினரும் இருந்தது.

**பொருளாதாரம்**

பேரரசின் பொருளாதாரம் சோளம், நெல், கரும்பு, பருத்தி, பட்டு, நவதானியங்கள், பருப்பு வகைகள், வெற்றிலை, மஞ்சள், ஏலக்காய், கிராம்பு, இலவங்கம், சந்தனம் போன்ற வாசனை திரவியங்களும் மற்றும் தென்னை போன்ற விளைபயிர்களைச் சார்ந்து இருந்தது. நீர்ப்பாசன வசதிகளை செய்த கொடுத்த விஜயநகர ஆட்சியாளர்கள், வேளாண்மை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க புதிய ஏரிகள் வெட்டினர். துங்கபத்திரா போன்ற ஆறுகளின் குறுக்கே தடுப்பு அணைகள் மற்றும் கால்வாய்கள் அமைக்கப்பட்டது.

பேரரசின் தலைநகரமான விஜயநகரம் எனும் ஹம்பி, பல நாட்டவர் கூடும் பெரும் வணிக மையமாக விளங்கியது. இந்நகர வணிக வளாகங்களில் தங்கம், வெள்ளி முத்து, மாணிக்கம், வைடூரியம், இரத்தினம், பவளம் போன்ற நவரத்தினங்கள் விற்கப்பட்டது. நாட்டின் செலாவணிக்கு முக்கியமாக தங்க நாணயம் வராகன் பயன்பட்டது.

பேரரசில் உள்ள கோயில்கள் சீரமைப்பு வேளைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், திறன் மிகு கட்டிடக் கலைஞர்களுக்கும், சிற்பிகளுக்கும் மற்றும் உலோகத் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் நல்ல வருவாய் கிடைத்தது.

அரபுக் கடலை ஒட்டிய மலபாரில் உள்ள கண்ணணூர் துறைமுகம் வழியாக அரேபியா, பாரசீகம், தென் ஆப்ரிக்கா, போர்ச்சுகல் போன்ற மேலை நாடுகளுடனும் வாணிகத்தொடர்பு நிலவியது. பருத்தி மற்றும் பட்டுத் துணிகள், நறுமணப் பொருட்கள், அரிசி, வெடியுப்பு, சர்க்கரை போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் ஆகும். அரேபியக் குதிரைகள், முத்துக்கள், செம்பு, பவழம், குங்குமப்பூ, பாதரசம், சீனத்துப்பட்டு துணிகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழிலும் வளர்ச்சியடைந்தது.

**சமூக வாழ்க்கை**

விஜயநகரப் பேரரசில் இந்து சாதிய முறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது. அரச கட்டளைகளை நிறைவேற்ற, கிராமப்புறங்களில்

ஒவ்வொரு சாதிக் குழுவினரும் தங்கள் தலைவரை தேர்ந்தெடுத்தனர். சமயச் சடங்குகளிலும், இலக்கியங்களிலும், அமைச்சரவைகளிலும் அந்தண சமூகம் உயரிடம் வகித்தது.[48] இருப்பினும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தோன்றிய சர்வக்ஞர், வேமனாமொல்லா, மொல்லா போன்ற சமய இலக்கியாவாதிகளும், கவிஞர்களும் சமூகத்தில் உயரிடத்தில் வைத்துப் போற்றப்பட்டனர். படைத்துறைகளில் இசுலாமியர் உள்ளிட்ட திறமை உள்ள அனைத்து சமூக இளைஞர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. விஜயநகரப் பேரரசில் உடன்கட்டை ஏறல் வழக்கம் இருந்தமைக்கு சான்றாக 50 நடு கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

12ம் நூற்றாண்டில் பசவர் தோற்றுவித்த வீர சைவம் எனும் லிங்காயத மரபு தற்கால வட கர்நாடகப் பகுதிகளில் பெரும்பாலான மக்கள் பின்பற்றினர்.

சமூக - சமய நெறிகளில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் பங்காற்றினர். திருமாலம்பா தேவி எனும் கன்னட மொழிக் கவிஞர் வரதம்பிகா பரிணயம் எனும் நூலையும், குமார கம்பணன் மனைவிகங்கதேவி எனும் அரசி மதுரா விஜயம் எனும் சமசுகிருத வரலாற்று நூலையும் எழுதியுள்ளனர். அனைத்து ஊர்களிலும் தேவதாசி முறை நடைமுறையில் இருந்தது. உடலை வளுப்படுத்தும் மல்யுத்தப் பயிற்சி கூடங்கள் சிறப்பாக நடைபெற்றது.

**மக்கள்**

இந்து சாதி அமைப்பு முறை விஜயநகரப் பேரரசில் பரவலாக இருந்தது. ஒவ்வொரு சமுதாயத்திலும் மூத்தோர்கள் சாதி ஒழுங்குமுறைகளை கவனித்து வந்தனர். இருப்பினும், போரிலும் மற்ற சேவைகளிலும் தங்களை வேறுபடுத்திக் காட்டியவர்கள் சாதி அல்லது மத பாகுபாடு இல்லாமல் பதவி உயர்வு வழங்கப்பட்டு ஊக்கப்படுத்தப் பட்டனர்.நகரங்கள் மற்றும் மாகாண சபைகளில் அனைத்து சாதி, மதப் பிரிவினைச் சார்ந்தவர்களின் பிரதிநிதித்துவமும் இருந்தது. மங்களூரு மற்றும் அதைப் போன்ற பகுதிகளில் அன்ஜமணா குழு சிறுபான்மை முஸ்லீம்களை பிரதிநிதித்துவப்படுத்தியது.

பெண்கள் நூற்றாண்டுகளாக அடைந்திருந்த சுதந்திரமும் மரபும் தொடர்ந்தது. சதி எனும் உடன்கட்டை ஏறும் பழக்கம் அரச குடும்பத்தினர் மற்றும் படைவீரர்களின் குடும்பங்களில் எங்கும் நிறைந்திருந்தது. பெண்கள் வணிகம். அமைச்சுப் பணிகள் மற்றும் மல்யுத்தம் போன்றவற்றில் பங்கெடுத்துக் கொண்டனர். சமூகமானது பெரும்பாலும்

ஒரு தார மணப் பழக்கம் உடையதாக இருந்தது. ஆனால், அரசரும், உயர்குடி மக்களும் அந்தப்புர வாழ்க்கையைத் தொடர்ந்தனர். தேவதாசி முறை மற்றும் விபச்சாரத் தொழில் செழித்திருந்தது. அவர்களுக்கெனவே சில தெருக்கள் ஒதுக்கப்பட்டருந்தன. பெண்கள் இரவிக்கை மற்றும் சேலைகள் அணிந்திருந்தனர். ஆண்கள் பெரும்பாலும் இடுப்புக்குக் கீழ் மட்டும் ஆடைகள் அணிந்தனர். அவ்வப்போது சட்டைகளும் அணிந்தனர். ஆண்கள் பெண்களைப் போல நகைகளை அணிந்தனர். விரல்களில் மோதிரங்கள், காதுகளில் வளையங்கள், கழுத்தணி, வளையல்கள் மற்றும் கைக்காப்பு ஆகியவை பிரபலமானவை. கொண்டாட்டங்களின் போது, ஆண்கள், பெண்கள் இருவருமே தலைகளில் பூக்களுடன் கூடிய பட்டைகளை அணிந்து கொண்டு, சந்தனம், பன்னீர், பூக்கள், புனுகு, கஸ்தூரி ஆகியவற்றால் ஆன நறுமணப்பொருட்களை பூசிக்கொண்டு இருப்பர். பல விளையாட்டுப் பலகைகள் கண்டுபிடிப்பட்டு கோயில்களின் தளங்கள், பாறைகள், மற்றும் கூழாங்கற்கள் ஆகியவற்றில் பொறிக்கப்பட்டுள்ளது. முக்கிய பொது இடங்களில் ஓய்வு நேர பொழுது போக்குகள் மற்றும் சமூக இடைவினைகள் நடந்ததற்கான போதிய சான்றுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான விளையாட்டுக்கள் இன்னும் கூட விளையாடப்படுகின்றன. சில விளையாட்டுக்கள் இன்னும் அடையாளம் காணப்பட வேண்டியவையாக உள்ளன.

**நாணயம்**

ஹம்பி, பெனுகொண்டா மற்றும் திருப்பதிலிருந்து தேவநாகரி, கன்னடம், தெலுங்கு மொழிகளில் வெளியிட்ட பேரரசின் நாணயகளில் விஜயநகரப் பேரரசர்களின் பெயர்கள் கொண்டிருந்தது. தங்கம், வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களை வராகம், பொன், பக்கோடா, பணம் மற்றும் காசு என அழைக்கப்பட்டது.[56] நாணயங்களில் பாலகிருஷ்ணன், திருப்பதி வெங்கடாஜலபதி, பூமாதேவி, சிறீதேவி, காளைகள், யானைகள், பறவைகள், அனுமன் மற்றும் கருடன் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

**சமயம்**

இந்து சமயத்தினரான விஜயநகரப் பேரரசு அனைத்து சமயங்களையும், சமயப் பிரிவுகளையும், அயல் நாட்டவர்களையும் வேறுபாடு காட்டாது சமமாக நடத்தியது. ஆனால் அரசவை நடைமுறை மற்றும் ஆடைகளில் சுல்தான்களைக் பின்பற்றினர்.

ஹரிஹரர்-புக்கர் சகோதரர்களுக்கு பேரரசை நிறுவ வழிகாட்டிய வித்யாரண்யரையும், அவர் அலங்கரித்த ஹரிஹர- சிருங்கேரி மடத்தை

ஆதரித்து வளர்த்ததுடன், சைவத்தைப் பின்பற்றினர். பின் வந்த சாளுவ மரபு மற்றும் துளுவ மரபு பேரரசர்கள் வைணவத்தைப் பின்பற்றினர். பேரரசின் முத்திரையாக விஷ்ணுவின் அவதாரமான வராகத்தைக் கொண்டனர்.

தற்கால கர்நாடகப் பகுதிகளில் புரந்தரதாசர், கனகதாசர், ஹரிதாசர் போன்றவர்களால் பக்தி இயக்கம் வளர்ந்தது. பசவர் நிறுவிய லிங்காயதம் செழித்தோங்கியது. சமஸ்கிருத மொழியில் புதிய இலக்கியங்கள் தோன்றியது. கர்நாடக இசைக் அறிஞர் அன்னமாச்சாரியார் தெலுங்கு மொழியில் பல பக்தி கீர்த்தனைகள் இயற்றினார்.

## மொழி

விஜயநகரப் பேரரசின் அவையில் கன்னடம் மற்றும் தெலுங்கு ஆட்சி மொழியாக இருந்தது. பேரரசின் பகுதிகளில் கன்னடம், தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகள் பயிலப்பட்டது. கன்னட மொழியில் 7000 கல்வெட்டுகளும், 300 தாமிரப் பட்டயங்களும், மீதமுள்ள கல்வெட்டுகள் தெலுங்கு, தமிழ் மற்றும் சமசுகிருத மொழியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## கல்வி

விஜயநகரப் பேரரசில் வாழ்ந்த மக்களுக்குப் பொதுக்கல்லி போதிப்பது அரசாங்கத்தின் கடமையாகக் கருதப்பெறவில்லை. தொழிற் கல்வியையும் பொதுக் கல்வியையும் அரசாங்கங்கள் ஏற்றுப் பல்கலைக்கழகங்கண அமைப்பது தற்காலத்திய குடியரசு அரசாங்கங்களின் கடமையாக உள்ளது. இவ்விதக் கொள்கை விஜயநகரப் பேரரசில் நிலைபெறவில்லை. சமூகத்தில் நிலைபெற்று இருந்த சாதி அமைப்புகளும், தொழிற்சங்கங்களும், சாதிக்கும் தொழிலுக்கும் ஏற்ற கல்வி முறைகளை அமைத்து நடத்தி வந்தன. விஜயநகர அரசாங்கம் மேற்கூறப்பட்ட கல்வி நிலையங்களில் எவ்விதமான தலையீடும் செய்யவில்லை. ஆனால், கலைகளில் வல்ல கல்வியாளர்களை அரசர்கள் போற்றிப் பல வழிகளில் ஆதரவு அளித்தனர்.

'கிராமங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் தனிப்பட்ட ஆசிரியர்கள் எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் முதலிய அடிப்படையான கல்வியைப் போதித்தனர், புத்தகங்களும் காகிதங்களும் இல்லாத அக் காலத்தில் மணலின் மீது எழுதுவதும் வாய்பாடு முதலியவற்றை மனப்பாடம் செய்வதும் பழக்கத்தில் இருந்தன, இல்விதப் பழக்கத்தால் காகிதம், எழுதுகோல், பேனா, மை முதலியவற்றிற்குரிய

செலவுகள் இல்லை. ஓலைச்சுவடி களே புத்தகங்களாக உபயோகப்பட்டன. ஹோகாவார் என்னு மிடத்தில் ஆண்பிள்ளைகளுக்கு இருபத்து மூன்று பள்ளிகளும் பெண்பிள்ளைகளுக்குப் பதின்மூன்று பள்ளிகளும் இருந்தன வென இபன்பதூதா கூறியுள்ளார். தனிப்பட்ட தொழிலாளர்களும் தொழிற்சங்கத்தினரும், அவரவர்களுக்குரிய தொழில்களில் பல இளைஞர்களைப் பயிற்றுவித்து வந்தனர்.

அந்தணர் வகுப்பைச் சேர்ந்த பண்டிதர்களும் கவ்லிமான் களும் வேதங்களையும் அவற்றோடு சேர்ந்த கலைகளையும் போதிய பதற்குப் பல பாடசாலைகளை அமைத்தனர். வடவார்க்காடு மாவட்டத்திலுள்ள அடையாலம் என்னுமிடத்திலுள்ள காளகண்டேசுவரர் கோவிலில் கண்ட பாஷியம் என்றும் நாலைப் போதிப்பதற்கு ஒரு பாடசாலை அமைத்தார். காஞ்சி அருளாளப் பெருமாள் கோவிலில் வேதங்களைப் போதிப்பதற்கு என வேத மடம் ஒன்றிருந்தது. கம்பண உடையார் காலத்தில் வேப்பூர் என்னுமிடத்தில் வேத அத்யயனம் செய்தவர்களுக்கு அத்தியான விருத்தியாக நிலம் அளிக்கப்பட்டது.

மதுரை நகரில் வேதாந்த சாத்திரங்களைப் போதிப்பதற்காகக் கல்விக்கூடங்கள் இருந்தனவாசு நொபிலிப் பாதிரியார் கூறுவார். அவர் 1610ஆம் ஆண்டில் எழுதிய கடிதம் ஒன்றில், மதுரையில் பதினாயிரம் மாணவர்களுக்கு மேல் பல்வேறு பேராசிரியர்களிடம் பல துறைகளில் கல்வி பயின்றனர் எனக் கூறுவார். இரண்டாம் வேங்கட தேவராயர் காலத்திலும் மதுரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியிலும் வேத பாடசாலைகளில் பயின்ற மாணவர் களுக்கு உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றை வழங்கவும் ஆசிரியர்களுக்கு ஊதியங்கள் கொடுக்கவும் பல தருமக் சுட்டளைகளை ஏற்படுத்தியிருந்தனர். வைணவக் கோவில்களில் வடமொழி வேதங்களையும், திராவிடப் பிரபந்தங்களையும், வேதாந்த சாத்திரங்களை பாராயணம் செய்வதற்கு 1888-ஆம் ஆண்டில் கிருஷ்ணராயர் ஆட்சியில் நிலங்கள் வழங்கப்பட்டு உள்ளன. நரசிங்கபுரத்தில் நாச நாயக்கருடைய தருமமாகப் பக்தி சஞ்சீவினி சான்ற புராணத்தை விரித்துரைத்த வைணவ அந்தணர்களுக்கு 1534ல் நிலங்களும் வீடுகளும் அளிக்கப் பட்டன. வேதங்களும் புராணங்களும் மடாலயங்களிலும் போதிக்கப்பட்டன.

வானநூல், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளையும் விஜயநகர அரசர்கள் ஆதரித்தனர். விஜயநகர மன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பெற்ற செப் பேடுகள், கல்வெட்டுகளின் சொல்லமைப்பு, எழுத்திலக்கணம், வரிவடிவம் முதவியவற்றைக் கொண்டு அக் காலத்திய

கல்வியின் நிலைமையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. வடமொழி, தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் கல்வெட்டு களும் செப்பேடுகளும் எழுதப்பட்டன. தமிழில் எழுதப்பட்ட கல்வெட்டுகளின் சொல்லாட்சியிலும் எழுத்திலக்கணத்திலும் ஒருவிதத் தரக்குறைவை நாம் காணமுடிகிறது. சோழர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலவிய கல்வெட்டுகளின் சொல்லாட்சியும் சொற்களின் நடையும் விஜயநகர காலத்தில் மாறுபட்டுள்ளன.

சில அரபு சொற்களும் போர்த்துகீசிய வார்த்தைகளும் விஜய நகர காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுகளில் கலந்துள்ளன. வடமொழியில் சுல்வெட்டுகளின் இலக்கணத்தை வகுத்தவர் களுக்குச் சூதர், மாகதர் என்ற பெயர்கள் வழங்கி, அரசர் களுடைய வெற்றிகளையம்), வீரச் செயல்களையும், மற்றப் பெருமை களையும் தொகுத்துக்கூறி, அவர்கள் மேற்கொண்ட பட்டங்களை மிகைப்படுத்திக் கூறுவதிலும் அவர்கள் வல்லவர்கள். இவ்விதம் அரசர்களுடைய வெற்றிகளையும், அவர்களுடைய மூதாதையர் களுடைய வெற்றிகளையும் சில சமயங்களில் மிகைப்படுத்திக் கூறி அரச பரம்பரையைக் கூறுவதிலும் வல்லவர்களுக்குச் சாசனச் சாரியர்கள் என்ற பெயர் வழங்கியது. பொதுவாகக் கல்வெட்டு களையும் செப்பேடுகளையும் வரைந்தவர்கள் பொற்கொல்லர் அல்லது தச்சுவேலை செய்த சாதிகளைச் சேர்ந்தவர்களாவர். ஆனால், கல்வெட்டுகளின் வாசகங்களை அமைத்தவர்கள் அந்தண வகுப்பைச் சேர்த்தவர்களாவர். சில சமயங்களில் அரச பரம் பரையைச் சேர்ந்தவர்களும் சாசனாச்சாரியர்களாக நியமிக்கப் பட்டனர்.

விஜய நகர ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவில் காகிதமும் காகிதங்களைக் கொண்டு செய்யப்பட்ட புத்தகங்களும் கிடையா, பனையோலையின்மீது எழுத்தாணி கொண்டு எழுதப் பெற்ற ஒலைச் சுவடிகளே புழக்கத்திலிருந்தன. அப்துர் ரசாக் பனையோலையின் மீது இருவிதயாக எழுதப்பெற்ற முறைகளை விவரித்துள்ளார். இரண்டு முழம் நீளமும், மூன்று விரல்கடை அகலமும் உள்ள பனை யோலையின் மீது எழுத்தாணி கொண்டு எழுதுகின்றனர். இம் மாதிரி எழுதப்படும் எழுத்துகளின் மீது எவ்விதமான வண்ணங் களும் பூசுவதில்லை. ஆகையால், அவை விரைவில் மறைந்து விடுகின்றன, மற்றொரு விதத்தில் வெண்மையான ஓலைகளின் மீது கறுப்பு மையைப் பூசுகின்றனர். அவற்றின் மீது எழுதப்பெற்ற எழுத்துகள் தெளிவாகத் தெரிகின்றன. அந்தச் சுவடிகள் நெடுங் காலத்திற்கு நீடிக்கின்றன. கள்ளிக்கோட்டைக்கு வருகை தந்த பார்போசாவும் இவ்விதப் பனையோலைச் சுவடிகளைப்பற்றிக் கூறுவார்.

**இலக்கியம்**

விஜயநகரப் பேரரசில் தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருத மொழி இலக்கியங்கள் செழித்து வளர்ந்தது. கன்னடம் மற்றும் தெலுங்கு மொழியில் வாழ்கை வரலாறு, புனைவு, இசை, இலக்கணம், கவிதை, மருத்துவம் மற்றும் கணிதம் தொடர்பான நூல்கள் இயற்றப்பட்டது. அரசவை மொழியாக கன்னடமும், தெலுங்கும் இருந்தது. கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் அனத்து துறைகளிலும் தெலுங்கு மொழி உச்சத்தை தொட்டது.

சமசுகிருத மொழியில் சாயனர் நான்கு வேதங்களுக்கும் உரைகள் எழுதினார். வித்யாரண்யர், அத்வைத சிந்தாந்தத்திற்கு விளக்க உரையாக பஞ்ச தசீ மற்றும் சர்வதர்சனசங்கிரகம் எனும் நூற்களை எழுதியள்ளார்.

பேரரசின் அரச குடும்பத்தவர்களில் கிருஷ்ணதேவராயர் ஆண்டாள் குறித்து ஆமுக்தமால்யதா மற்றும் ஜாம்பவதி கல்யாணம் என் இராண்டு தெலுங்கு நூற்களை இயற்றினார். மதுரை சுல்தானகத்தை வென்ற குமார கம்பணனைப் போற்றும் விதமாக, கங்கதேவி எனும் இளவரசி மதுரா விஜயம் எனும் வீரகம்பராய சரித்திரம் நூலையும் இயற்றியுள்ளனர்.

கிருஷ்ணதேவராயரின் அரசவைக் கவிஞர்களான தெனாலி ராமன், அல்லாசானி பெத்தன்னா, நந்தி திம்மன்னா, அய்யல்லு இராமபத்ருடு, மடையாகரி மல்லன்னா, இராமராஜாபூசணம் ஆகியோர் தெலுங்கு மொழியில் கவிதைகள் இயற்றினர். தமிழ் மொழியில் சொரூபானந்தர் மற்றும் தத்துவராயர் அத்வைத வேதாந்ததிற்கு விளக்க உரை நூல்கள் எழுதினார். மலையாள மொழியில் நீலகண்ட சோமயாஜி வானவியல் குறித்தான நூல் எழுதியுள்ளார்.

**விஜயநகரக் கட்டிடக்கலை**

விஜயநகரக் கட்டிடக்கலை என்பது, கிபி 1336–1565 காலப்பகுதியில், தென்னிந்தியாவின் பெரும்பகுதியில் விஜயநகரப் பேரரசின் ஆட்சி நிலவிய காலத்தில் வழங்கிய கட்டிடக்கலைப் பாணியைக் குறிக்கும். இன்றைய இந்திய மாநிலமான கர்நாடகத்தில் உள்ள துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்திருந்த விஜயநகரம் இப்பேரரசின் தலைநகரமாக இருந்தது. இதனால் இக் காலத்தில் கட்டப்பட்ட ஏராளமான கோயில்கள், மாளிகைகள் மற்றும் பல கட்டிடங்கள் இப் பகுதியிலேயே செறிந்து காணப்படுகின்றன. இவற்றுள் விஜயநகரத்தினுள் அடங்கும் ஹம்பி பகுதியில் இருக்கும்

கட்டிடச் சின்னங்களின் தொகுதி யுனெஸ்கோவினால் உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

இக் காலத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன, அத்துடன், தென்னிந்தியா முழுவதும் ஏற்கனவே இருந்த பல நூற்றுக்கணக்கான கோயில்களில் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டதுடன், திருத்தவேலைகளும் செய்யப்பட்டன. பழைய தலைநகரப் பகுதியில் விஜயநகரக் காலத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான கட்டிடச் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றன. இவற்றுள் 56 சின்னங்கள் யுனெஸ்கோவினால் பாதுகாக்கப்படுகின்றன. அறுநூற்று ஐம்பது சின்னங்கள் கர்நாடக அரசினால் பாதுகாக்கப்படுகின்றன. இன்னும் 350 வரையிலான சின்னங்கள் பாதுகாக்கப்படவேண்டி உள்ளன.

போசளர் மற்றும் திராவிடக் கட்டிடக்கலை கலந்து வடிக்கப்பட்ட விஜயநகரக் கோயில்கள் பெரும்பாலும் உறுதியான சுற்று மதில்களால் சூழப்பட்டவை. இவை, மரம், செங்கல், சுண்ணாம்புச் சாந்து ஆகியவற்றைக் கொண்டு சோழர் பாணியில் அமைக்கப்பட்டன. கோபுரங்களில் தெய்வகள், முனிவர்கள், தேவதைகள் ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டு அழகூட்டப்பட்டது. பேலூரில் உள்ள சென்னகேசவர் கோயில், ஸ்ரீரங்கம், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் உள்ள இராய கோபுரங்களுக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

மதில்களுக்குள் கருவறையைச் சுற்றிய கூரையிடப்பட்ட திருச்சுற்று, மகாமண்டபம் எனப்படும் தூண்களோடு கூடிய பெரிய மண்டபம், கல்யாண மண்டபம், வசந்த மண்டபம் மற்றும் திருக்குளம் என்பனவும் கோயில்களின் கூறுகள் ஆயின. தூண்களின் ஒரு புறத்தில், அவற்றோடு ஒட்டியபடி நிமிர்ந்த நிலையில் யாளிகள், முதுகில் வீரர்கள் இருக்க, இரண்டு கால்களில் பாய்ந்தபடி நிமிர்ந்து நிற்கும் குதிரைகள் ஆகியவற்றின் சிற்பங்கள் காணப்படுகின்றன. தூணின் மறு பக்கங்களில் இந்துப் பழங்கதைகளை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும்.

### சிறப்பு இயல்புகள்

விஜயநகரக் கட்டிடக்கலையைச் சமயம் சார்ந்தவை, அரசு சார்ந்தவை, குடிசார்ந்தவை என மூன்றாகப் பிரித்துப் பார்க்க முடியும். விஜயநகரக் கட்டிடக்கலைப் பாணி இதற்கு முன், இப்பகுதிகளில் நிலவிய சாளுக்கிய, ஹோய்சல, பாண்டிய, சோழர் கட்டிடக்கலைகளின் இயல்புகள் பலவற்றைத் தன்னுள் அடக்கியது.

விஜயநகரப் பேரரசும், ஹோய்சாலப் பேரரசும் ஆட்சி புரிந்த சுமார் 400 ஆண்டுகளாக இளகல் தீப்பாறை (chloritic schist) அல்லது மாவுக் கற்களே (soapstone) கோயில் கட்டிட வேலைகளில் விரும்பப்பட்டன. மாவுக்கல் செதுக்குவதற்கு இலகுவானது என்பதால் சிற்பவேலைகளுக்கும் இது பெரிதும் பயன்பட்டது. விஜயநகரக் காலத்தில், பாதமி சாளுக்கியப் பாணிக் கட்டிடங்களுக்கு உள்ளூர்க் கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. சில சிற்பங்களிலும், புடைப்புச் சிற்பங்களிலும் மாவுக்கற்கள் பயன்படுத்தப்பட்டு இருப்பதையும் காணலாம். கருங்கற் பயன்பாடு சிற்பவேலையின் செறிவைக் குறைத்துவிட்டாலும், கருங்கல் நீண்டகாலம் நிலைக்கக் கூடியது என்பதால் கோயில் கட்டிடங்களுக்கு விரும்பப்பட்டது. இங்கே பயன்பட்ட கருங்கற்கள் செதில்களாக உடையக்கூடியனவாக இருந்ததால், முன்னைய காலத்தைப் போல் உயர் தரம் வாய்ந்த சிற்பங்கள் மிகச் சிலவற்றையே உருவாக்க முடிந்தது. சிற்பங்களில் பயன்பட்ட கற்களில் காணப்பட்ட சீரற்ற மேற்பரப்பை மறைப்பதற்காக, சிற்பிகள் சாந்துப் பூச்சுக்களைப் பூசி மேற்பரப்பை வழுவழுப்பு ஆக்கியதுடன், நிறங்களும் பூசி அழகுபடுத்தினர்.

## கோயில் அமைப்பு

விஜயநகரக் கோயில்கள் பெரும்பாலும் உறுதியான சுற்று மதில்களால் சூழப்பட்டவை. சிறிய கோயில்கள் ஒரு கருவறையையும் அதன் முன் அர்த்த மண்டபம் எனப்படும் சிறிய மண்டபம் ஒன்றையும் மட்டும் கொண்டவை. நடுத்தர அளவிலான கோயில்களில், கருவறையயும், அர்த்த மண்டபத்தையும் இணைக்கும் சிறிய இடைநாழி எனும் ஒரு சிறிய இடம் அமைந்திருக்கும். அத்துடன் அர்த்த மண்டபத்துக்கு அப்பால் முக மண்டபம் என்னும் இன்னொரு மண்டபமும் இருக்கும். பெரிய கோயில்களில் சுற்று மதில்களில் வாயில்கள் இருக்கும் இடங்களில் பெரிய கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. விஜயநகரப் பேரரசர்களான ராயர்களின் பெயரைத் தழுவி இக் கோபுரங்கள் ராய கோபுரங்கள் என அழைக்கப்பட்டன. இவை, மரம், செங்கல், சாந்து ஆகியவற்றைக் கொண்டு, பெரும்பாலும் சோழர் பாணியில் அமைக்கப்பட்டன. கோபுரங்களில், மக்கள், கடவுளர் ஆகியோரின் பெரிய அளவுச் சிற்பங்கள் அமைக்கப்பட்டு அழகூட்டப்பட்டன. தமிழர் கட்டிடக்கலைச் செல்வாக்கினால் உருவான இவ்வழக்கம், பேரரசன் கிருஷ்ணதேவ ராயரின் காலத்தில் பிரபலமாகிப் பின்வந்த 200 ஆண்டுகள் தொடர்ந்து புழக்கத்தில் இருந்து வந்தது. பேலூரில் உள்ள சென்னகேசவர் கோயில் கோபுரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீசைலம் ஆகிய இடங்களில் உள்ள கோயில் கோபுரங்கள் ஆகியவை ராய கோபுரங்களுக்கு நல்ல எடுத்துக் காட்டுகள் ஆகும்.

இவை தவிர, மதில்களுக்குள் கருவறையைச் சுற்றிய கூரையிடப்பட்ட திருச்சுற்று, மகாமண்டபம் எனப்படும் தூண்களோடு கூடிய பெரிய மண்டபம், கல்யாண மண்டபம், திருக்குளம் என்பனவும் இக் காலக் கோயில்களின் கூறுகள் ஆயின. இக் காலத் தூண்களின் ஒரு புறத்தில், அவற்றோடு ஒட்டியபடி நிமிர்ந்த நிலையில் யாளிகள், முதுகில் வீரர்கள் இருக்க, இரண்டு கால்களில் பாய்ந்தபடி நிமிர்ந்து நிற்கும் குதிரைகள் ஆகியவற்றின் சிற்பங்கள் காணப்படுகின்றன. தூணின் மறு பக்கங்களில் இந்துப் பழங்கதைகளை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருக்கும். யாளிகள், குதிரைகள் போன்றவை இல்லாத தூண்கள் சதுர வடிவாக அமைந்து அவற்றில் பழங்கதைகளை அடிப்படையாகக் கொண்ட அழகூட்டல்கள் காணப்படும்.